Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -20 | 05-07-2003 | சனிக்கிழமை | ஓசை 137



நல்வுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்

நலிவுற்றோருக்கு உதவுவோம்

கொடிவாரம்

01.07.2003 - 21.07.2003

சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம், கிளிநொச்சி.


# தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் இன்று கரும்புலிகள் நாள் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

தமிழீழப் பிரதேசமெங்கும் இன்று கரும்புலிகள் நாளை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் இன்று காலை 9.00 மணிக்கு பொது ஈகச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றலுடன் எழுச்சி பூர்வமாக ஆரம்பமாகும். இதனையடுத்து அகவணக்கம் செலுத்தி, கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டு வீரவணக்க உரைகளும் நடைபெறும்.

மாலையில் கரும்புலிகள் நினைவுநாளைச் சிறப்பிக்க பிரதேச வாரியாகவும், மாவட்ட ரீதியாகவும் பொதுக்கூட்டங்கள், கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கரும்புலிகளின் படங்கள் வைக்கப்பட்டிருக்கும் மண்டபங்கள், தூபிகள் என்பன சிவப்பு, மஞ்சள், நீலம் மற்றும் கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் வீதிகள், பாடசாலை கள், தொழில் நிலையங்கள ,போராளிகள் பாசறைகள் என்பனவும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பிரதேச வாரியாக கரும்புலிகளின் படங்கள் வைக்கப்பட்டு மக்கள் வீரவணக்கம் செலுத்தும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

காலையிலிருந்து மாலைவரை பொது இடங்களில் கரும்புலிகள் பாடல்கள், வரலாறுகள் ஒலிபரப்பப்படவுள்ளன. யாழ். வேலணையில்

(10ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு தாமதமாவது குறித்து இராஜதந்திரிகள் கவலை!

## நோர்வே தரப்பிலும் சலிப்பு

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த வரைபினைத் தயாரிப்பதில் அரசாங்கம் காட்டும் தாமதம் குறித்து கொழும்பிலுள்ள சில மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் மட்டத்தில் விரக்தி ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

லண்டனுக்கு கடந்த மாதத்தின் பிற்பகுதியில் விஜயம் செய்திருந்த சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் நாடு திரும்பியதும், இடைக்கால நிர்வாகம் குறித்த நகல் திட்டம் விடுதலைப்புலிகளிடம் கையளிக் கப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக மேற்குலக நாடுகளில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இடைக்கால நிர்வாகம் குறித்த திட்ட வரைபு புலிகளிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்த்திருந் தனர். இதன் அடிப்படையிலேயே எரிக்சூல்ஹெய்ம் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

# புளொட் உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புளொட் உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி தெரியவருவ தாவது.

வைத்தியமனை வீதியிலுள்ள புளொட் அலுவலகத்தில் இருந்து துவிச்சக்கர வண்டியில் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது திமிலத்தீவு பால் சேகரிப்பு நிலையத்துக்கு அருகில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் வவுணதீவைச் சேர்ந்த ஜஸ்ரின் வைரமுத்து மேகநாதன் (வயது-31) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இக்கொலைச் சம்பவம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொதுமகனைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு அபராதம்

## யாழ். மனித உரிமை ஆணைக்குழு விதிப்பு

(யாழ்ப்பாணம்)

முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பொதுமகன் ஒருவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு யாழ் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவால் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸ் நிலையத்திலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாக யாழ். மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து நேற்று மனிதவுரிமை

(10ம் பக்கம் பார்க்க)

# சனாதிபதி சந்திரிகா மீது ஜே.வி.பி. க்கு நம்பிக்கையில்லை

## ஜே.வி.பி.பா.உ. லால்காந்த

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா நம்பகத் தன்மையற்றவர் என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

சந்திரிகா மீது தமது கட்சிக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்த அவர் பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவற்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சி எவ்வாறு நடத்துகின்றது என்பதைத் தாம் தெரிந்து வைத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி திண்ணையில் அமர்ந்தவாறு ஜே.வி.பி.யை வெளியே நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தவே விரும்புவதாக அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பொ.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பி.க்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாகவும் அவர் சந்தேகம் தெரிவித்துள்ளார். இவரின் இக்கூற்றுகளும் இருகட்சிகளும் கூட்டுச் சேர்வதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வரும் நிலையில் இரு கட்சிகளுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புதிய காவலரண்கள் படையினர் அமைப்பதைத் தடுக்கக் கோரிக்கை

## - கண்காணிப்புக்குழுவுக்கு பொது அமைப்புக்கள் மகஜர்

மட்டக்களப்பு நகரப் பகுதியில் படையினர் புதிதாகக் காவலரண்கள் அமைப்பதைத் தடுத்து நிறுத்துமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கைவிடப்படவுள்ளது.

தமிழ்க் குழுக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறிக்கொண்டு படையினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) புளொட் ஆகியவற்றின் முகாம்களுக்கு அருகிலும் ஏனைய இடங்களிலும் படையினர் புதிது புதிதாக காவலரண்களை அமைத்துவருகின்றனர். இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரி கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் சமர்ப்பிக்கபொது அமைப்புக்கள் தயாராகி வருகின்றன

# யாழ்.மருத்துவபீடப் பகுதியில் இராணுவத்தினர் திடீர் சோதனை

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை அண்மித்த பகுதிகளில் படையினர் நேற்று திடீர் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் திருநெல்வேலியை அண்மித்த பகுதிகளில் வந்திறங்கியதுடன் அவ்வீதியால் சென்ற வாகனங்களை மறித்து சோதனைக் கெடுபிடிகளில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தச் சோதனைக் கெடுபிடி

(10ம் பக்கம் பார்க்க)

# சம்பள உயர்வு வழங்கப் பணிப்பு

2004 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து அரச ஊழியர்களின் சம்பளத்தினை அதிகரிக்குமாறு பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக சொக்ஸி இம்மாத இறுதிக்குள் அறிக்கை ஒன்றினைத் தரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்து அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த

(10ம் பக்கம் பார்க்க)

# சாலியபுரம் வெடி விபத்து பற்றி மூவர் கொண்ட குழு விசாரணை

(கொழும்பு)

அநுராதபுரம் சாலியபுரம் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக மூவர் கொண்டகுழுவினால் உயர்மட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். மேற்படி குழு இராணுவத்தளபதி லயனல் பலகல்லவின் பணிப்பின் பேரில் அநுராதபுரத்துக்கு விஜயம் செய்துள்ளது.

வடபகுதியில் உள்ள இராணுவத்தினருக்குத் தேவையான ஆயுதங்கள் இந்த முகாமில் இருந்தே விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த முகாமில் முன்னரும் தீ விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)

# கிளி.மாவட்ட வைத்தியசாலை கிளிநகரில் மீண்டும் ஆரம்பம்

அக்கராயன் வைத்தியசாலையுடன் இணைந்து அக்கராயன் பிரதேசத்தில் இயங்கிவந்த கிளி. மாவட்ட வைத்தியசாலை மீண்டும் கிளிநகரில் முன்னர் இயங்கிவந்த அதேஇடத்தில் தற்காலிக இரு நோயாளர்பிரிவு (எக்ஸ் கதிர், பரசிகிச்சைப் பிரிவு, அடங்கலாக எதிர்வரும் 09ம் திகதி முதல் இயங்கவுள்ளதாகவும், மகப்பேற்று விடுதி தற்போது நடைபெற்று வரும் அதே இடத்தில் நடைபெறும் என்பதையும் கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் தெரிவிக்கிறார்.

## வரிவிளம்பரம்

### சனி மாற்றம் உங்களுக்கு எப்படி

ரூபா 15 எங்கும் விற்பனையாகின்றது. 22.05.03 - சனிமாற்றம், 23.07.03 - வியாழமாற்றம், 15.08.03 - ராகு-கேது மாற்றம் (எல்லா ராசிப் பலன்களும் அடங்கியன) கணிப்பாசிரியர் **PROF** சத்தியதாசன் (சத்யா) ருக்குமணி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு. (7757)


## நோர்வே உதவி

படைமுகாம்களாக பாவிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க நோர்வே உதவியளித்துள்ளது.

இதன் பிரகாரம் திருமலை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள ஏழுபாடசாலைகளை முதற் தடவையாக புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கிளிநொச்சி, முல்லை மாவட்ட விவசாயிகள் 490 பேருக்கு கிராமிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியால் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும்490 விவசாயிகளுக்கு ஐம்பத்தொன்பது லட்சத்து நாற் பத்து மூவாயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன் தொகையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 397 பயனாளிகள் கடன் தொகையாக நாற்பத்தேழுலட்சத்து ஐம்பத்தோராயிரம் ரூபாவையும், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 93 பயனாளிகள் பதினொரு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் ரூபாவும் ஆக மொத்தம் ஐம்பது லட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபாவைப்பெற்றுள்ளனர்.


இத்தகைய கடன் உதவிகள் மூலம் மேற்படி மாவட்டங்களின் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு விவசாயிகளையும் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளில் ஊக்குவிப்பதே நோக்கம் எனவும் கிராமிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவிக்கின்றனர்.(லோ)

# பெரும் சேதமடைந்த நிலையில் கண்டாவளை வெலிக்கண்டல் பாலம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் கண்டாவளைப் பகுதியில் அமைந்துள்ள வெலிக்கண்டல் பாலம் பெரும் சேதமடைந்துள்ளது.

இப்பாலம் பல ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டது.



ஆயினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்னர் திருத்தப்பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாது மோசமாக சேதமடைந்துள்ள இப்பாலத்தை தொடர்ந்தும் மக்கள் பயன் படுத்திவருவதால் அவர்களின் பயணம் ஆபத்து நிறைந்ததாகியுள்ளது.

மேற்படி பாலத்தின் மீதான வீதியில் பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளதுடன், வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளது. (லோ)

# - கொக்குத் தொடுவாயில் - நிவாரண விநியோகத்திற்கு ப.நோ.கூ.ச.வில் அரிசி இல்லை

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கொக்குத்தொடுவாய்கிளைச் சங்கத்தில் நிவாரண அரிசி இல்லாமையால் அப்பகுதி மக்கள் பெரும் அவலப்பட்டு வருகின்றனர். கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலிருந்துஇடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கான நிவாரணத்துக்கான அரிசி மேற்படி கிளைச்சங்கத்தில் ஐந்து நாட்களாக இல்லாமையால் நாளாந்தம் சங்கத்திற்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். (ஆ)


## MINISTRY OF TERTIARY EDUCATION AND TRAINING

### SKILLS DEVELOPMENT PROJECT
### CIVIL WORKS

TENDER CONDITIONS & INSTRUCTION TO TENDERERS
TENDER FOR CIVIL WORKS AT INFORMATION TECHNOLOGY CENTER AT

### NAITA, MULLAITIVU

The following Amendments are made to Para 3.0 and Para 4.0 of Tender Notice Published in the EELANATHAM News Paper of 03.07.2003, as regard to above tenders.

3.0 All tenders should be submitted in duplicate before 10.00 A.M on 11.07.2003, sealed under One cover and should be addressed to The Zonal Director of Education, Zonal Education Office, Mullaitivu.

4.0 Tenders will be opened at 11.00 A.M on 11.07.2003 at Zonal Education Office, Mullaitivu Tenderers or their duly authorized representatives may be present at the time of opening of tenders. The tendered amount only in respect of each tender opened will be read out to those present at the time of opening of the tenders.

T. GURUKULARAJAH,
Zonal Director of Education,
Mullaitivu.

(சி-8402)

## பூந்தோட்ட பராமரிப்பாளர் தேவை

பூந்தோட்ட பராமரிப்பாளர் யுனிசெவ் (UNICEF) நிறுவனத்திற்கு வேண்டப்படுகிறார்.

**தகைமை: பூந்தோட்ட பராமரிப்பில் நான்கு வருட அனுபவம்**
**கிளிநொச்சியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.**

மேற்படி தகைமையுடையோர் 09-07-2003 புதன்கிழமைக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை யுனிசெவ் (UNICEF)இல. 144 கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறோம்.

யுனிசெவ் (UNICEF) ஐக்கிய
நாடுகள் சிறுவர் நிதியம்
இல. 144
கண்டிவீதி,
கிளிநொச்சி.

(சி-8484)

## தமிழீழ மாணவர் அமைப்பின் ஆசிரியர் பணிநிலைக்கான விண்ணப்பம்

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு பின்வரும் பாடங்களுக்கு தகமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடங்கள்- கணிதம்/விஞ்ஞானம்/ஆங்கிலம்

தகைமை-அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி

ஊதியம்:- ஆசிரியர் சேவை 3-1ற்கானது.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 10-07-2003

நேர்முகத் தேர்வு:- 12-07-2003

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- தமிழீழ மாணவர் அமைப்பு,நடுவப்பணியகம், கிளிநொச்சி

*நேர்முகத்தேர்வு குறித்த திகதியில் குறித்த முகவரியில் நடைபெறும்.*

சிவசுந்தரம் வீதி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(சி-8423)

## கூறுவிலை கோரல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென ஏ—9 வீதி முறிகண்டியில் வீதியின் மேற்குப்புறமாக வீதியிலிருந்து ஏறத்தாள சராசரி 1.5 கி.மீ தூரத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் ஐந்து பெயர்ப்பலகைகள் செய்து பொருத்த கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 09.07.2003 வரை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீட்டுக்கான தொகையை பணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

☐ மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 1000/-

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்படிவங்கள் 10.07.2003 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கூறுவிலைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கூறுவிலைப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கூறுதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-8401)

# ஈராக் குறித்த ஐ. நா. தீர்மானத்தில் தெளிவு ஏற்பட்டபின் அமைதிப்படையை அனுப்புவது பற்றி முடிவு செய்யப்படும்

## - இந்திய வெளியுறவுச் செயலர்

(புதுடில்லி)

**ஈராக் பற்றிய ஐ.நா. தீர்மானத்தில் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்களுக்கு தீர்வு கண்ட பின்னர், இந்தியா ஈராக்கிற்குப் படைகளை அனுப்புவது பற்றி முடிவு செய்யப்படும் என்று இந்திய வெளியுறவுச் செயலர் கன்பன்ஷிவல் கூறியுள்ளார்.**

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கண்டலிஸாறைஸ் மற்றும் ஏனைய தலைவர்களுடன் கடந்த இரண்டு நாட்களாக நடத்திய பேச்சுக்களின் பின்னர் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஈராக்கிற்குப் படைகளை அனுப்புமாறு ஐ.நா. சபை நேரடியாக வேண்டுகோள் விடுத்திருந்தால் இந்தியா இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏதும் இருந்திருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் படைகளை அனுப்பினாலும் அனுப்பாவிட்டாலும் அமெரிக்காவுடனான உறவை இது பாதிக்காது என்றும் கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு இந்தியத் துருப்புக்களை அனுப்புமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தமையை அடுத்து, ஈராக்கிற்கான இந்தியத் தூதர் பாக்தாத் செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதாகவும், ஈராக்கின் தற்போதைய நிலைமை குறித்து புதுடில்லிக்கு அறிக்கை அனுப்புமாறு அவர் கோரப்பட்டதாகவும் கன்பன்ஷிவல் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்ய அங்குள்ள கூட்டணி நிர்வாகத்திடமும், ஈராக்கியத் தலைவர்களிடமும் பேச்சுக்கள் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் செயலர் தெரிவித்துள்ளார்.

இது தவிர ஈராக்கின் நிலைமை குறித்து ஐ.நா. சபையுடனும், ஈராக்கின் அயல் நாடுகளுடனும் பேச்சுக்கள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகவும் கன்பன்ஷிவல் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கு படைகளை அனுப்புவதற்கு முன் அந்நாட்டுடன் இந்தியாவிற்குள்ள நீண்ட கால பயன்கள் உட்பட பல்வேறு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உயர் தொழில நுட்ப வர்த்தகக் கொள்கை குறித்து இரு நாடுகளும் விவாதித்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இந்தியா திட்டம்

மிக்-23, மிக்-29 ஆகிய போர் விமானங்களுக்கான இயந்திர பாகங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் மிகப் பெரிய திட்டத்தை லான்பூரில் இருக்கும் இந்திய விமானப் படையின் பராமரிப்புத் தொழிற்சாலை மேற்கொண்டுள்ளது. இந்திய விமானப்படையின் பராமரிப்புப் பிரிவுத் தலைவர் ஏர்மார்ஷல் பி.சி.நிஸாம் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்துள்ளார். இதனால் நடப்பு நிதியாண்டில் 500கோடி ரூபாய் பெறுமதியுள்ள வெளிச்செலாவணி மிகுதிப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.




அமெரிக்க-பிலிப்பைன்ஸ் நட்புறவு ஏற்பட்ட 4ஆம் ஆண்டு கொண்டாட்டத்தை எதிர்த்து மணிலாவில் அமெரிக்காவுக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள்

# ஆபிரிக்காவில் அமைதிப்படை

# ஆராய புஷ் 5 நாள் விஜயம்


(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி புஷ் செவ்வாய்க்கிழமை ஆபிரிக்க நாடுகளுக்கு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

செனகல்,உகண்டா,நைஜீரியா உட்பட பல நாடுகளுக்கு அவர் செல்லவுள்ளார். எயிட்ஸ் நோய் தடுப்பு, அடிமை வியாபாரத்தை ஒழித்தல், தாரா ளவர்த்தகம், வறுமை ஒழிப்பு, ஆபிரிக்காவில் அமைதிப்படையொன்றை அமைதல் உட்பட பல விடயங்களை அவர் ஆராயவுள்ளார்.

ஆபிரிக்காவில் பயங்கரவாதத் தடை நடவடிக்கைகளுக்கென 10 கோடி டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக புஷ் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் கொங்கொ சனநாயக குடியரசில் அதிக எண்ணிக்கையிலான வீரர்களை அமைதிப்படையில் இணைக்கு மாறு கூறியுள்ளார்.



மொன்ரோவியா விடுதி ஒன்றில் உதவிகளுக்காகக் காத்திருக்கும் லைபீரிய அகதிகள்

# யூதக் குடியேற்றம் மீது தாக்குதல் நடத்திய ஐவர் பலஸ்தீனப் பொலிசாரால் கைது

(ஜெருசலேம்)

காஸா முனையிலுள்ள யூதக் குடியேற்றத் திட்டங்கள் மீது மோட்டார் குண்டுத்தாக்குதல்களை நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஐந்து பலஸ்தீனத் தீவிரவாதிகளை பலஸ்தீனப் பாதுகாப்புப்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்களில் காஸா முனையின் தென்பகுதியிலுள்ள அகதி முகாமில் இரண்டு பேரை பலஸ்தீன பொலிசார் கைதுசெய்துள்ளனர் எனவும், காஸா நகரத்தில் நேற்று முன்தினம் மேலும் 03 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என பலஸ்தீனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனப் பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில்; முக்கியமான மூன்று தீவிரவாத குழுக்களும் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன எனவும், இதனை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் கூறியுள்ளார்.

பாக்தாத்தில் ரொக்கட் கிரனைட்டினால் தாக்கப்பட்டு எரியும் வாகனத்தருகில் காவல் கடமையில் இருக்கும் அமெ. இராணுவம்.



# "எஸ்மா" சட்டப்படி ஊழியர் மீது நடவடிக்கை எடுப்பதை தடைசெய்க

## - தமிழக அரசிற்கெதிராக ஊழியர் சங்கம் உயர் நீதிமன்றில் வழக்கு


(சென்னை)

அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது தமிழக அரசு எஸ்மா சட்டத்தைப் பயன்படுத்துவதை எதிர்த்து தமிழக அரச ஊழியர் சங்கத்தினால் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரனை இன்று நடைபெறவுள்ளது. அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது அரசு எஸ்மா சட்டத்தை பயன்படுத்துவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குடிநீர், மின்சாரம், போக்குவரத்து துறைகளுக்கு மட்டுமே எஸ்மா சட்டம் பொருந்தும் என்றும் கல்வி மற்றும் அரச பணிகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்றும் கூறப்பட்டு இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அரசுடன் நடந்த பேச்சு வார்த்தை தோல்வியடைந்தமையை அடுத்து, முறைப்படி நோட்டீஸ் அனுப்பி இவ் வேலை நிறுத்தம் நடைபெறுவதால், எஸ்மா சட்டத்தைப் பயன்டுத்துவது சட்ட விரோதமானது என்றும், எஸ்மா சட்டத்தில் கைது செய்யப்படுவதற்கு இடைக்காலத்தடை விதிக்க வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



காஸா முனையிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தால் விரட்டப்பட்ட பலஸ்தீனச் சிறுவன்.

# சதாமைப் பிடிக்கத் தகவல் தருபவருக்கு 234 கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும்

## அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

சதாம் ஹுசைனைப் பிடிப்பதற்குத் தகவல் அளிப்பவர்களுக்கோ அல்லது அவர் இறந்தமையை உறுதிப்படுத்துபவர்களுக்கோ 25 மில்லியன் டொலா அதாவது 234 கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் றபர் நேற்று முன்தினம் பாக்தாத் சென்று இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சதாம் ஹுசைனும், அவரது இரு மகன்களும் உலகிற்குப் பெரும் அச்சுறுத்தல் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சதாம்ஹுசைனின் இரு மகன்களை மட்டும் பிடிப்பதற்கு 15 மில்லியன் டொலர் பரிசு வழங்கப்படும் என்றும் அமெரிக்க நிர்வாகி போல் றபர் அறிவித்துள்ளார்.

# காந்த சக்தி

காந்த சக்தி என்பதே பொருட்களின் ஆதாரமான மின் அமைப்பால்தான் விளைவது. எல்லாப் பொருட்களும் அணுக்கட்டத்துக்குள் போனல் உட்கருவும் அதைச் சுற்றிக்கொண்டிருக்கும் எலெக்ட்ரான்களுமாக அமைந்திருக்கின்றன.

எலெக்ட்ரான் என்பது ஒரு சின்ன மின் துகள் ஆகும். இது சுழலும் போது அதன் விளைவாக காந்தசக்தி ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும்.

மின் சக்தியும், காந்த சக்தியும் இணை பிரியாதவை. எங்கெங்கே மின்சாரம் நகர்கிறதோ அங்கங்கே காந்தசக்தி ஏற்படுகின்றது.

இவ்வாறாக அணுக்கட்டத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எலெக்ட்ரான்கள் சுற்றிக்கொண்டிருக்கும் அச்சை நோக்கி ஒரு காந்த சக்தியை ஏற்படுத்துகின்றன.

எலெக்ட்ரான்கள் உட்கருவைச் சுற்றுவது மட்டுமன்றி தம்மைத்தாமே சுற்றிக்கொள்கின்றன. இதை ஸ்பின் என்று கூறப்படுகின்றது.

இந்த தனக்குத்தானே சுழற்சியாலும் காந்த சக்தி விளைவுகள் உருவாகின்றன. இவ்விரு காந்த சக்திகளும் ஒத்துப் போகும் போது, ஒரே திசையை நோக்கியிருக்கும் போது, இணையாக இருக்கும் போது இந்த மின்காந்த விளைவு ஒன்று சேர்ந்துகொண்டு அந்த அணுவே ஒரு குட்டிக் காந்தமாகின்றது.

எலெக்ட்ரான்கள் சுழலும் திசைகள் இதற்கு ஒத்துப்போக வேண்டும்.

உதாரணமாக ஹீலியம் அணு அதன் உட் கருவைச் சுற்றி வர இரண்டு எலெக்ட்ரான் வைத்துக் கொண்டிருக்கின்றது. ஒன்று வலப்பக்கம் சுழல்கின்றது. மற்றது இடப்பக்கம்.

அவற்றின் ஸ்பின்னும் எதிர் எதிர். இதனால் ஹீலியம் அணுவின் எலெக்ட்ரான் சுழற்சிகளால் உபரியாக காந்த சக்தி ஏதும் ஏற்படுவதில்லை. ஹீலியம்அணு காந்தப்படி நியூட்ரல்.

மற்ற எல்லாத் தனிமங்களை விட இரும்பில் கணிசமான உபரி காந்தசக்தி உள்ளது.

இதன் ஒவ்வொரு அணுவும் ஒரு காந்தம் அதன் அணுக்கட்டம் சீரானது. அதனால் இரும்பு அணுவுக்கு அருகில் மற்றொரு காந்தத்தைக் கொண்டுவந்தால் படக்கென்று அதன் காந்த அணுக்கள் ஒரே சீராகத் தம்மை அமைத்துக் கொண்டுவிடுகின்றன.

அதன் காந்த சக்தி மிக அதிகமாகி விடும். சுருங்கக் கூறினால் இரும்பு அணுக்களின் ஒருமித்த ஒத்துழைப்பால்தான் அதற்கு காந்த சக்தி ஏற்படுகின்றது.

இவ்வகையில் கோபல்ட், நிக்கல் போன்றவையும் இந்த சக்தி கொண்டவை. காந்தத்தில் வட துருவம், தென் துருவம் எல்லாம் சம்பிரதாயங்களே.

பூமி ஒரு பெரிய காந்தம். பூமிக்கு எப்படி காந்த சக்தி வந்தது என்பதைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

பூமியின் சுழற்சியினால் இது ஏற்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. இல்லை பூமியைச் சூழ்ந்திருக்கும் அயன மண்டலத்தின் அயன்களின் விளைவு என்றும் கூறப்படுகின்றது.

இன்னும் தீர்மானமாகத் தெரியாத நிலையில் பூமிக்கு வடக்குத் தெற்காக ஒரு காந்த சக்தி இருக்கின்றது.

குட்டிக் காந்தத்தைத் தொங்க விடும் போது பூமியின் வடக்குத் தெற்கான காந்தத்துடன் இணையாக இருந்தால்தான் இரண்டிற்கும் பிணக்குக் குறைவாக இருக்கும்.

திரும்பவும் முயற்சித்தால் பூமியின் காந்தம் எங்கே நகர்கின்றது என்று அதை இழுத்து நேராக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

எனவே பூமியின் வடகாந்த துருவத்தை நோக்கும் முனையை கந்தகத்தின் வடதுருவம் என்றும் எதிர் முனையைத் தென்துருவம் என்றும் சொல்லப்படுகின்றது.

கொஞ்சம் யோசித்து நோக்கினால் ஒரு தலை கீழ் காந்தம் என்பது தெரிய வரும். எல்லாமே எலெக்ட்ரான்களின் சுழற்சியால் தான் ஏற்படுகின்றது என்பதும் புரியக் கூடியதாக இருக்கும்.

# கடலில் மிதக்கும் பனிமலை

700 மீற்றர் நீளமான மிதக்கும் பனிக்கட்டி மலையே (**Ice-berg**) படத்தில் இருப்பதாகும்.


அண்டாட்டிக்காவிலிருந்து தெறித்து விழுந்த இந்தப் பனிக்கட்டிமலை அத்திலாந்திக் சமுத்திரத்தில் மிதந்து சென்றபோது இப்படம் எடுக்கப்பட்டது. ஆர்ஜன்டீனா நகரில் மார்ஷல் ப்ளாட்டா எனும் கடல் பிராந்தியத்தில் இது மிதந்து வடக்கு நோக்கிச் செல்கின்றது.



ஆர்ஜன்டீனா கடற்படையினரின் முயற்சியை அடுத்து இது ஏனைய பனிக்கட்டிகளோடு இணைந்து கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# காற்றில் ஓடும் கார்

சுற்றாடல் அசுத்தமாவதற்கு முதல் காரணம் வாகனங்களினால் வெளியேற்றப்படும் புகைதான். வாகனங்கள் மூலம் வெளியேற்றப்படும் இந்தப் புகை மூலம் வருடாந்தம் உலகம்



பூராவும் கோடிக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டு இறந்து போகின்றார்கள்.

இந்நிலையில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு பிரான்ஸ் கார்கள் கம்பனி ஒன்று நவீன ரக கார் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இந்தக் கார் முழுக்க முழுக்க காற்றினால் தான் ஓடும் தன்மை கொண்டது. ஒரு தாங்கி காற்றினால் மணிக்கு 110 கிலோமீற்றர் ஓடக்கூடியது.

# இரவில் பிராணிகளின் கண்கள் வெளிச்சத்திற்கு ஒளிருவதேன்

பிராணிகளின் கண்திரையின் பின்புறம் டாம்பிட்டம் என்று ஒரு கண்ணாடி இருக்கின்றது. இதுதான் எதிர்வெளிச்சத்தை எமது வெளிச்சத்தைப் பிரதிபலிக்கின்றது. மனிதர்களுக்கு இந்தத் திரை இல்லை. பரிணாம வளர்ச்சியில் தேவையில்லாமல் போயிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

# ஒலிம்பிக் கொடி

ஒலிம்பிக் கொடி பிரான்ஸ் நாட்டின் பியரீடி குபர்டின் என்பவரின் ஆலோசனைப்படி 1913 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1914 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாரீஸ் நகரத்தில் இக்கொடி அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் பெல்ஜியம் நாட்டின் ஆன்ட்வர்ப் நகரில் 1920ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் தான் முதலில் ஏற்றப்பட்டது. குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கென வேறு கொடி உள்ளது.

# கண்ணீர்

கண்ணீர் என்பது ஒரு உப்பு நீராகும். கண்ணுக்கு மேலாக நம் கண்ணில் படாத மாதிரி மறைவாக லாக்ரிமல் கிளாண்ட் (**Lachrymal Gland**) எனும் ஒரு சுரப்பி இருக்கின்றது. இது தான் கண்ணீரின் மூலம் ஆகும். இந்த சுரப்பி சுரக்கின்ற திரவம்தான் கண்ணீர் எனப்படுகின்றது.

தாளமுடியாத எரிச்சல், அமோனியாப்புகை, அதீத மகிழ்ச்சி, சோகம், பயம் இவையெல்லாம் இந்த சுரப்பியைத் தூண்டிவிட்டுக் கண்ணீரை வரவழைக்கின்றன.

பொதுவாக விழிக்கோளத்தில் தூசிபட்டால் கழுவி விடுவது தான் இந்த லாக்ரிமல் கிளாண்ட் சுரப்பியின் வேலையாகும். அதனால் இது அபூர்வமாக மட்டுமே தான் இயங்கும் தன்மையுடையது என்றும் கூறப்படுகின்றது.

# போலர் ஆந்தை கழுகு ஆந்தை



போலர் கரடியைப் போல் போலர்ஆந்தையும் (**Polar owl**) இருக்கின்றது. இந்த ஆந்தை ஐரோப்பாவில் சென் பீட்டர்ஸ்பேக் மிருகக்காட்சி சாலையில் இருக்கின்றது.



ஆந்தைகளில் ஒருவகை கழுகு ஆந்தை (**Eegle owl**) ஆகும். இந்த ஆந்தை சென்பீட்டர்ஸ் பேக் மிருகக்காட்சி சாலையில் இருக்கின்றது.

# கடலின் அதிக ஆழம் வரை சென்றால்....

கடலுக்கடியில் அதிக ஆழம் வரை நீந்திப் போகக் கூடாது என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

ஏனெனில் நீரின் கீழே செல்லச செல்ல கடல் நீரின் அழுத்தம் அதிகமாகும். நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள நைட்ரஜனும் இரத்தத்தில் கரைய ஆரம்பிக்கும். இவ்வாறு கரைவதனால் போதைப் பொருட்கள் பாவித்தமை போன்ற சந்தோசமும் ஏற்படும்.

இதனை **Repture of the Depth** என்று கூறப்படுகின்றது.

கொஞ்சம் பைத்தியம் பிடித்த நிலை என்றும் கூறுகின்றார்கள். இந்நிலையில் என்ன செய்கின்றோம் என்பதே தெரியாது. சிலர் உடலிலுள்ள எல்லாவற்றையும் பிடுங்கியெறிந்துவிட்டு கடலின் ஆழத்திலேயே மூழ்கி விடுகின்றனர்.

அதேநேரம் ஆழத்திலிருந்து மேலே வேகமாக வந்தால் இன்னும் ஆபத்து ஏற்படும். சோடா போத்தல் திறந்தவுடன் நுரைத்துக்கொண்டு வருவது போல ரத்தத்திலுள்ள நைட்ரஜன் கொப்பளித்தது.

அதன் குமிழிகள் மூளைக்குச் சென்று மரணம் ஏற்பட்டுவிடும்.

# கணினியைத் தாக்கும் சார்ஸ் வைரஸ்

சீனாவிலிருந்து சார்ஸ் வைரஸ் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சார்ஸ் வைரஸ் எனும் வைரஸ் ஒன்று உலகெங்கும் உலா வரத் தொடங்கியுள்ளது.

இந்த வைரஸ் தாக்கிவரும் மின்னஞ்சல் கடிதங்களின் சப்ஜெக்ட் வரியில் பலவகையான வாசகங்கள் உள்ளன.

இணைப்பு பைலாக ஹொங்கொங் எனும் பைலும் சார்ஸ் வைரஸ் என்ற பெயரில் ஒரு பைலும் வருகிறது.

இவற்றைத் திறந்து பார்த்தவுடன் அதிலுள்ள வைரஸ் புரோக்கிராம் இயங்கி கணினியிலுள்ள முகவரி ஏட்டைப் பாதிக்கின்றது.

தானாகவே ஒரு பைலைத் திறந்து காட்டுவது போல் சார்ஸ் குறித்த பொய்யான தகவல்களைத் தருகின்றது. முகவரி ஏட்டிலுள்ள கடிதத்தைப் போன்ற கடிதத்தை அனுப்புகின்றது.

வேறு எதுவும் பாதிப்பு இல்லை. இது குறித்துப் பல நிறுவனங்கள் எச்சரிக்கை தந்தாலும் இதனைக் கண்டறிந்து அழிக்கும் ரோக்கிராம் இன்னும் வரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

# காம்பக்ட் டி.வி.டி. பிளேயர்



ஒரு வார இதழின் பாதி அளவேயுள்ள காம்பக்ட் டி.வி.டி. பிளேயர் விற்பனைக்கு வந்துள்ளது. பயணங்களின் போது கையில் எடுத்துச் செல்ல இலகுவாக சிறிய அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் தேவையான திரைப்படம், மற்றும் வீடியோ போட்டோ கிளிப்களை இதிலுள்ள திரையில் பார்த்துக் கொண்டே செல்லலாம்.

# முகம் தெரியாத முத்துக்களே!

ஊருறங்கும் வேளையிலும்
உலகுறங்கும் இரவினிலும்
நீருறங்க மறந்து
நினைவதிலே தாயகக் கனவதனை சுமந்து
தோள்களிலே சுமப்பதன்
சுமைதனை மறந்து
இரவோடு இரவாக
இலக்கதனை அடைந்து
அண்ணனின் ஆணைக்காய்-காத்திருந்து
அதிகாலை புலருமுன்பு-அந்த ஆணை கேட்டு
அராஜகம் புரிந்த
அரக்கர் படைக்கலம் மீது
அனலெனப் பாய்ந்து
அடுத்த வினாடி
அதிர்ந்த அம்மண்ணிலே
ஆகுதியாகிய
அற்புத நாயகரே
உங்கள் எல்லையற்ற தியாகத்தால்

எங்கள் நெஞ்சங்களில் நிலைத்தீரே
விடிகாலைப் பொழுதினில்
விழித்தெழுந்த உலகம்
விபரிக்க முடியாத அதிசயமென
வியந்து நோக்கியதே.
உலகின் திசையெங்கும்
உம் வீரம் காற்றிடை கலந்து
உதிரத்தை உறையச் செய்ததுவே.
அசைக்க முடியாத உங்கள்-மன
உறுதியால் உலகின் ஜீவராசிகள்
அத்தனையும் அதிசயித்தனவே
வீரமா மறவர்களே!
வாய்விட்டழ முடியாதே
மனதினிலே வெந்து-உம்
நினைவதால் கலங்கி-உங்கள்
தடம் பதிந்த மண்ணதிலே
பாதமதை தேடுகின்றோம்.

-சி.பிரேமா

## கரும்புலிகள்

இடிபாடுகளின் இதயம் திறந்து
எழுந்து மலர்ந்தன
பூக்கள்

முன்னோர்களின் முகவரியையே
முனகி உச்சரித்தன
உதடுகள்.

சுதந்திரத்தையே நினைத்து நினைத்து
சூல் கொண்டது
இம்மண்.

இருளின் போர்வை
இதயம் திறந்து எங்கும்-புதிய
காற்று


புதிய பூக்கள் மலரும் மலரும்
புதிதாய் தற்கொடை
பூக்கும்.

கடலும் தரையும் மண்ணும் விண்ணும்
கனலும் தியாகக்
காற்று

நீங்கள் சிந்திய குருதித் துகள்கள்
எல்லைக் கோடுகள்
போடும்.

நீங்கள் எண்ணிய எண்ணக் கருக்கள்
தேசிய கீதம்
ஆகும்.

- ரதீசியா புவனேந்திரராசா.




## பணி தொடரட்டும்

கரிகாலன் கையசைக்க
கணமேனும் பிசகாது
எதிரி கதை முடித்து
காற்றில் கலந்தவர்கள்....
கடலில் கரைந்தவர்கள்....

மடியும் நேரமதை
மனதில் தெரிந்து கொண்டு
மக்களின் விடிவிற்காக-சாவை
மகிழ்வுடன் ஏற்றவர்கள்....

சந்தன மேனிதனை
தணலாக்கி-
சக்கை வண்டி கொண்டு
சரித்திரம் படைத்தவர்கள்...

அகிலமே அதிசயித்திட
அன்னியன் குகை புகுந்து
அனலாக வெடித்ததினால்
மௌனத்தில் நினைக்கப்படுபவர்கள்....

மில்லர் தொடக்கிய வழியில்
புல்லர்களை அழித்திட
தடம் பதித்த-எம்
தேசத்தின் புயல்களே...
உம்பணி வரலாறு சொல்லும்.
ஈழம் மலரும் வரை
உம் பணி தொடரட்டும்.

-சி.ஜெயரூபி

## உலகில் உயர்ந்தவர் கரும்புலிகள்

உயிரை உடலை
உணர்வை வெடியாய்
ஒருகணப் பொழுதில்;மா
ஈகம் செய்தவர் கரும்புலிகள்!

பகையின் கொடுமையை
படையின் எதிர்வை
புகையாய் கரியாய்
புழுதியில் சேர்த்தவர் கரும்புலிகள்!

பெயரை முகத்தை
பெருந்தலைவன் வரத்தை
உயர்வரலாற்றினிலே
உயர்த்தி நிற்பவர் கரும்புலிகள்!

கடலின்மடியில்; பகை
கப்பலை உடைத்து
தரையில் தருக்கரின்
தளத்தையழித்து; தமிழர்
மானம் காத்தவர் கரும்புலிகள்!

நினைவில் உயிரில்
நிறைவில் நிறைவாய்
மறையில் ஒளியாய்
மாண்புற வாழ்பவர் கரும்புலிகள்!

உயிரே உணர்வே
ஒளியே அருளே
உமது ஒளியில்
ஒளிர்வோம் உண்மை
உறுதிகொள்வோம் தமிழீழம்
உலகில் ஒளிரும் இனிதே!

- இராஜிசண்முகநாதன்.

## வாசல் திறந்த விடி வெள்ளி

இருண்ட வானில் வெள்ளி பூத்திடும்
நிலவு ஒளி மனதை கவர்ந்திடும்
குமுறும் கடலலை தானும் மெல்ல
வீசும் காற்றை கண்டு அடக்கிடும்.
வெந்த நெஞ்சம் புண்பட்ட நாளை
நினைவாய் சுமந்து நெஞ்சுகள் இளகிடும்.
பூக்கள் சொரிந்திடும் கைகளால் கண்ணீர்
வெடித்த கரும்புலி நாளை உணர்த்திடும்
வாசல் திறந்த வரலாற்று வீரம்
கரும்புலி என்றதெம் விடி வெள்ளியென
உலகம் உணர்ந்திடும் இன்று யூலை-05
என்பதால் எங்கும்.

- ம.அருள்யோன்சன்

## யார் இவர்கள்

தமிழ்த் தாயின் கருவில் உருவான முத்துக்கள்
தமிழ் மண்ணில் விதையானதேன்
தமிழனாய் பிறந்ததால் தான்
தவழவே சொந்த மண்ணின்றி தரணியில் புலியானான்
தமிழன் உலகெங்கும் வாழ்ந்தென்ன.
உரிமையாய் கூறிட உண்டா?
நமக்கு நாடென்றான்
எம் தேசத்தை மீட்டிட சீறிடும் புலியானான்
கடல் நிலம் வானமும்
கலங்கிட போர் செய்தான்
கயவன் இருப்பிடம் கரும்புகையானது
கரும்புலி சாதனை கயவர்கள் அறிந்தனர்
உலகம் வியந்தது உறவுகள் அழுதது
உரிமைப் போருக்காய் உயிர்தந்த மலர்களே
ஆடி ஐந்தென்றால் சாதனை நாட்களாம்
உங்கள் சரித்திரம் பாடிட
வார்த்தைகள் தேடினேன்
திரும்பும் திசையெங்கும் தெரியுது உன் நிழல்
ஆடித் தென்றலும் கரும்புலியெங்குது
அசைந்திடும் மரங்களும் அதையே சொல்லுது
உன் பெயர் செல்ல
ஓடும் நீரும் உலகத் தமிழினமே
மணம் குன்றா மலர் இனங்கள்
என்றும் மணம் வீசும் மல்லிகைகள்
ஒளிமங்கா ஒளிச்சுடர்கள்
விலையற்ற மாணிக்கங்கள்
தமிழ் வீரத்தாய் ஈன்ற பிள்ளை இவர்கள்
பெயர் கரும்புலிகள்.

- முறிகண்டி கரன்


## கரும்புலி நாள்

யூலை - 05
கரும்புலிகள் நாள் – நம்
இதயத்தில்
குடிகொண்டிருப்பவர்களின்
நினைவுநாள்
கந்தகப் பொடியினை
சந்தன மேனியில்
சாதாரணமாய் சுமந்து
வெடியாகி வெந்து
வீரத்தின் விருட்ஷமானவர்கள்
நினைவு கூரும் நாள்
நாளும் பொழுதும் – தாய்
நாட்டை நினைத்து
தன்னலம் நோக்காது
பிறநலம் கொண்டு
வித்தாகிப் போனவர்கள் நாள்
தற்கொடையாளர்கள் – என்ற
சொற்பதத்துக்கு
இலக்கணம் வகுத்த
இலட்சியவாதிகள் நாள்
கரிய இருளில்
நகர்வு கொண்டு
கப்பலில் இடித்து
ஆட்டியை அடித்து
கவச வாகனத்தை
எரியச் செய்த எங்கள்
தெய்வங்களின் நாள்
கிழக்கே உதிக்கும்
சூரியனின் இலங்கு கதிர்கள்
மலரப் போகும்
தமிழீழத்தின்
மணி மகுடங்கள்
இவர்கள்தான்
கரும்புலிகள்.

- மதுமிதா இராசேந்திரம்

# கரும்புலி முதல் வித்து கப்டன் மில்லர்

1987 மே 26ஆம் திகதி "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற பெயரில் சிங்கள அரசாங்கம் யாழ். குடாநாட்டின் ஒரு பகுதியான வடமராட்சி மீது பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. பெரும் மக்கள் படுகொலை 'இடப்பெயர்வு அவலம்' கைதுகள் என்பவற்றின் மத்தியிலும் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற முனைப்புடன் இப்பாரிய படையெடுப்பை சிங்கள அரசாங்கம் நடத்தியிருந்தது.



சிறிலங்காவின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் படைகள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் திட்டத்திற்கமைய 100 கோடி ரூபா பொருட்செலவில் இப்படையெடுப்பை நடத்தி முடித்திருந்தன.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பிறந்த இடமான வல்வெட்டித்துறை இப்பகுதியில் அமைந்திருந்ததால், விடுதலைப்புலிகளைத் தாம் வெற்றி கொண்டுவிட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த வடமராட்சிப் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளுவதன் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சிறுமைப் படுத்திவிடலாம; அதன் மூலம் விடுதலைப் போராட்டம் குறித்து தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைச் சிதைத்துவிடலாம் என்பது அன்றைய சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவினதும் லலித் அத்துலத் முதலியினதும் திட்டமாகும்.

எனவே ஏனைய எந்த விடயங்களையும் கருத்திற்கொள்ளாது பாரிய படையெடுப்பின் மூலம் வடமராட்சியை ஆக்கிரமித்துவிட்டு சிங்களத் தலைவர்களும் படைகளும் வெற்றிக்களிப்பில் மூழ்கியிருந்தன.

கைப்பற்றிய பகுதிகளில் சந்தேகத்துக்கிடமானவர்கள் என்ற பெயரில் நூற்றுக்கும் அதிகமானஇளைஞர்களைச் சுற்றிவளைத்துக் கைது செய்து தென்பகுதிச் சிறைச்சாலைகளுக்கு கொண்டுசென்று சித்திரவதைகள் செய்து தடுத்து வைத்திருந்தனர்.

பொதுமக்களில் ஆயிரக்கணக்கானோரை அகதிகளாக்கி ஏனையோரை சொந்த இடங்களிலேயே பதற்றத்தின்மத்தியிலான அவல வாழ்க்கையை சிங்கள அரசு ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய முனையாக அமைந்துவிட்ட. கரும்புலித் தாக்குதலை தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

1987 ஜூலை 5ஆம் திகதி நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த சிங்களப்படை முகாமை தனியொருவனாக வெடிமருந்தேற்றிய வாகனத்தில் சென்று முற்றாகத் தகர்த்து நூற்றுக்கணக்கான படையினரை அழித்து கரும்புலிகள் சகாப்தத்தின் முதலாவது போராளியாக கப்டன் மில்லர் தனது இன்னுயிரை ஈகம் செய்தார்.

கரும்புலி கப்டன் மில்லர் குறித்து அவரது தாயார் பின்வருமாறு கூறுகிறார்.

"என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் எண்டிறது என்ர நம்பிக்கை தம்பி. அதனால நான் அவன்ர போக்குகளைப் பற்றி பெரிசா யோசிக்கிறதில்லை" மில்லரின் அம்மா, தன் பிள்ளையைப் பற்றிப் பெருமையோடு கூறிக்கொண்டிருந்தாள்.

"அவனொரு துடியாட்டமானபெடியன். ஒரு இடத்துல ஆறுதலா இருக்கிறதைக் காணேலாது. ஏதாவது ஒண்டு செய்து கொண்டுதானிருப்பான். மண்ணைக்கிண்டுவான். பற்றறியையும் வயரையும் வைச்சு முடிஞ்சு கொண்டிருப்பான். அல்லது அப்பாவின் கார் 'பொனட்டை' திறந்து போட்டு, அதுக்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக் கொண்டிருப்பான்..." அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

"மற்ற ஆட்களுக்கு உதவி செய்யிற பழக்கம் அவனிட்ட சின்னனில் இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடனே போய் செய்து கொடுப்பான்... முயற்சியும் இரக்கமும் அவன் பிறக்கும் போதே அவனோட கூடப் பிறந்ததுகள் தம்பி"

மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும் போது அருகிலிருந்து அவதானித்துக் கொண்டிருப்பவன், அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச் செய்து பார்க்கத்துவங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத்துவங்கியது. நாட் செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும் பின்னுக்கும் போய்வந்தது. ஒரு நாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்த போது கார் வீதியிலே ஏறி விக்கி விக்கி ஓடத்துவங்கிவிட்டது. அம்மாவை பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடிவந்து நின்று பார்த்தாள்.

இப்படித்தான் இன்னும் ஒருநாள்;

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டிற்கு முன்னால் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த மில்லர் அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான்.

வீட்டிற்கு வந்தவன். மெதுவாக ஒழிந்து, ஒழிந்து பின்னால் போய் கார் 'ராங்கிற்குள் குழாயைச் செலுத்தி வாயால் இழுத்து பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, ஒரு அசல் அப்பாவியைப் போல அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றான். நடந்தைக்கண்ட போதும் அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மாவுக்கும் அது பிழை மாதிரித் தெரியவில்லை.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால், அவனது செய்கைகளைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை.

காலச்சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. இப்போது 1984இன் ஆரம்பம் எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது. எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறிய பொழுது அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது.

முன்புபோல், பழைய நண்பர்களுடன், மாந்தோப்பில் விளையாடுவது நின்றுபோனது, இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான்.

ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடிவந்த தம்பி சொன்னான். "அம்மா... அம்மா அண்ணா சந்தியடியில நோட்டீசு குடுத்துக் கொண்டு நிற்கிறான்."

அம்மாவுக்கு உள்ளூரப் பயம்தான். ஆனாலும், அம்மா அவனைப் புரிந்து கொண்டாள்.

அவனின் புதிய நண்பர்கள் அவனைத் தேடி வீட்டிற்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப் போவான். இப்படிச் செல்கின்றவன் சில நேரங்களில் ஒருசில இரவுகள் கழித்தும் வருவான் அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவாள். எல்லோரும் சிரித்துக் கதைத்து சந்தோசமாக சாப்பிடுவதைப் பார்த்து அம்மா சந்தோசப்படுவாள். இது வழமையாகிப் போனது.

இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பி வரவில்லை. "பயிற்சி முகாமில் நிற்கிறான்" என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளும் அழுதாள். இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை.

அந்தத் தாய் அந்த இறுதி நாளை நினைத்துப் பார்க்கிறாள்.

அது "ஒப்பரேசன் லிபரேசன்" காலம்.

"அந்த நேரம் இங்க எல்லா இடத்திலையும் ஆமி. அதனால இரவில நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்..."

"...திடீரென வீடெல்லாம் அதிர - பெரிய ஒரு குண்டுச் சத்தம் எங்களைத் திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்சநேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாகிட்டுது...

"பொடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு" என்று எங்களுக்கை கதைச்சுப் போட்டு நாங்கள் படுத்திட்டம்.

அடுத்தநாள் காலையில் நெல்லியடிப்பக்கம் இருந்து வந்த ஒருத்தர் ஊருக்குள்ள சொல்லி-அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்க வந்த போதுதான் தெரியும்...

முதல் நாள் வீட்டை உலுக்கி என்னை நித்திரையால திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச்சத்தம்... என்ர பிள்ளையும்...

அப்ப அழவும் ஏலாது எல்லாப்பக்கத்திலையும் ஆமி...

அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமுறி அழுதன்.



அயலாக்கள் பின்பக்கத்தால் வந்து எங்களுக்கு ஆறுதல் சொல்லுவினம்.

ரோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக் கொண்டு கேட்கும்-மெதுவாக பின்பக்கத்தால கலைஞ்சு போயிடுவினம்... பிறகு வருவினம்...

ம்...ம் என்ர மகன் செத்திட்டான் எண்டுரது எனக்கு கவலைதான். ஆனால், அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன். அதை நினைக்க பெருமையாகத்தான் கிடக்கு.

கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 21 வயதேயான வசந்தன் எனும் இளைஞன் மில்லர் எனும் முதலாவது கரும்புலியாக நடத்திக் காட்டிய இந்தத் தியாக வேள்வித் தீ தொடர்ந்தும் கொழுந்து விட்டெரிந்து விடுதலைப் போராட்டம் முன்னேற குறுக்கே தடையாக இருக்கும் அனைத்தையும் பொசுக்கியது.

முதற் கரும்புலி மில்லரின் வழியிலே ஆண்களும், பெண்களுமாக கரும்புலி அணியாகப் பரிணாமம் எடுத்து அந்த அணி ஈட்டிய சாதனைகள் உலக வரலாற்றிலே எங்குமே இடம்பெறாதவையாகும். தரையிலும் கடலிலுமாக தமது உயிரையே ஆயுதமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இருந்த தடைக்கற்களையெல்லாம் இந்த அணி உடைத்தெறிந்தது.

தரையிலே பாரிய முகாம்களுக்குள் எல்லாம் உட்புகுந்து எதிரியைப் பொறி கலங்கச் செய்து பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் முதலடி எடுத்துக் கொடுத்தவர்கள் கரும்புலிகள்.

எதிரியின் குகைக்குள் புகுந்து அவன் நெற்றிப் பொட்டில் அடித்ததுபோன்றும் அவனுடைய இதயத்தை உலுக்கியது போன்றும் கொடுத்த அடிகள் போராட்ட வரலாற்றிலே பல திருப்பு முனைகளை ஏற்படுத்தின. அரசியல் இராணுவ ரீதியாக பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

கடலிலே மக்களுக்கு அச்சுறுத்தலாக நடமாடி மக்களின் குடியிருப்புக்களை நாசம் செய்த பாரிய சிங்களக் கடற்கலங்கள் கரும்புலிகளின் தாக்குதலால் சிதறி மூழ்கின. யாழ். குடாநாட்டை எதிரி முற்றுகையிட்ட போது அந்த முற்றுகையை உடைத்தெறிய, எதிரியின் விநியோக வழியை சிதைக்க, புலிகளின் நடமாட்டங்களை இலகுபடுத்த எதிரியின் பாரிய முகாம்களை முற்றுகையிட்ட போது கடல் வழியாக எவ்விதத்திலும் எதிரி விநியோகம் செய்ய முடியாது தடுக்க என போராட்டத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்த வற்றை மட்டுமல்ல போராட்டத்தின் திருப்பு முனைகளுக்கே இக் கரும்புலிகளின் தன்னல மற்ற ஈகங்களே காரணமாக இருந்தன.

கடலிலும் தரையிலும் எதிரி தமது பெயர் கேட்டு அஞ்சியோடச் செய்தனர் இக் கரும்புலிகள். கரும்புலிகளின் நாமத்தை உச்சரிக்கவே அஞ்சினர் எதிரிகள்.

இவர்களின் பலம் என்ன என்பதை இவ் அணியைக் கலைத்துவிட வேண்டுமென ஆக்கிரமிப்பு யுத்தத்திற்குத் தலைமை தாங்குவோர் வலியுறுத்துவதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது இன்றுள்ள உன்னத நிலையை அடைய 59 ஆண் தரைக் கரும்புலிகளும் 18 பெண் தரைக் கரும்புலிகளும் 117 ஆண் கடற்கரும்புலிகளும் 46 பெண் கடற்கரும்புலிகளுமாக 240 கரும்புலிகள் தம்மை முற்று முழுதாக ஈகம் செய்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவருடைய வரலாறும் சாதனைச் சரிதங்கள்; தமிழ் மக்களுக்கு வழி காட்டிகள்.

**தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட மானது இன்றுள்ள உன்னத நிலையை அடைய 59 ஆண் தரைக் கரும்புலிகளும் 18 பெண் தரைக் கரும்புலிகளும் 117 ஆண் கடற்கரும்புலிகளும் 46 பெண் கடற்கரும்புலிகளுமாக 240 கரும்புலிகள் தம்மை முற்று முழுதாக ஈகம் செய்துள்ளனர்.**

# 4ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தால் இந்திய உதவியோடு புலிகளை வீழ்த்துவோம்

## -அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

**நாலாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டால் இந்தியாவின் உதவியைப் பெற்றுப் புலிகளை அடித்து வீழ்த்தி அதன் பின் சமாதானத்தை நிலைநாட்டுவது உறுதியாகிவிடும் என அநுரா பண்டாரநாயக்க ஊவா பரணகம பண்டாரநாயக்க மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது கூறியுள்ளார்.**

ரணில் ஒன்றரை வருடமாக மக்களுக்கு செய்தது என்ன? உலகத்தைச் சுற்றுவதும் புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்ததுமே. இவ்வாறான அக்கிரமமான அரசு வரலாற்றிலேயே இல்லை. வடக்கு கிழக்கில் புலிகள் தனியரசமைத்து விட்டனர். அதிகாரமும் வழங்கப்பட்டுவிட்டது. திருட்டுத்தனமாக ஆயுதக் கப்பல்கள் வந்துள்ளன. ரணில் பாராமுகமாக இருக்கின்றார். தமிழர் மட்டுமே வடக்கில் வாழ வேண்டும் என்று பிரபாகரன் கூறுவதற்கு ஆம் பிரபு என்கிறார் ரணில்".

இந்த நாட்டின் ஐக்கியத்தைப் பேண சனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார். அதனைச் சரியாக நிறைவேற்றுவார்.

உண்மையில் ரணில் மோசடிகள் மூலம் நாட்டைத் தாரைவார்த்தால் அவரை வீட்டுக்கனுப்ப சனாதிபதி எப்பவும் பின்நிற்கப் போவதில்லை. உலகில் எங்குமில்லாத சனாதிபதி முறையை ஜே.ஆர் அறிமுகப்படுத்தியுள்ளார். அதற்கேற்ப சந்திரிகாவிடம் அதிகாரம் இருக்கிறது. பெண்ணாக இருந்தாலும் ஓர் ஆணைப் போல சனாதிபதி செயலாற்றுகிறார். ரணிலுக்கு வழங்கப்பட்ட அதிகார எல்லை போதும். லொத்தர் சபை பொறுப்பேற்றாயிற்று. இன்னும் எதனைப் பொறுப்பேற்பது என இப்போது தெரியாது.

ஐந்து மாதங்களில் பாராளுமன்றைக் கலைக்க நாம் சனாதிபதியை வலியுறுத்துவோம்.

நாம் சரியான வாக்குறுதிகளையளித்து ஆட்சிக்கு வருவோம். சகல இடது சாரிகளினதும் கூட்டணியுடன் 119 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டுவோம் எனவும் அநுரா கூறியுள்ளார்.

# கரும்புலிகள் நாளையொட்டி விசுவமடுவில் சிரமதானம்

(விசுவமடு)

ஜுலை-5 கரும்புலிகள் நாளை ஒட்டி பிரமந்தனாறு, புன்னை நீராவி,உழவனூர், தம்பிராசாபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பொது இடங்களில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சிரமதானப்பணி விசுவமடு பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி காசிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இச்சிரமதானப் பணியில் விசுவமடு வலயப் பொறுப்பாளர், விசுவமடுப் பிரதேச அரசியல்துறையினர், ஜெயம் மற்றும் கிளி நொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தமிழ்மலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (14)

# திரியாயில் மீளக்குடியேறுவோருக்கு ஸ்பெயின் செஞ்சிலுவை உதவும்!

(மட்டக்களப்பு)

திரியாயில் மீளக்குடியேறும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க ஸ்பெயின் நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

'எக்கோ' நிறுவனம் உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக திரியாய் கிராமத்திற்குச் சென்று திரும்பிய ஸ்பெயின் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

குடிநீர்க் கிணறுகளைப் புனரமைத்தல், கழிப்பறைகளை உருவாக்குதல், விவசாய உள்ளீடுகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## -கிளி நொச்சி மத்திய கல்லூரி-

# வணிக மாணவ மன்றத்தின் "அறிவருவி" சஞ்சிகை வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரி வணிக மாணவ மன்றத்தினரின் "அறிவருவி" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை கிளி.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வணிக மாணவர் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிற்றம்பலம், கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் வன்னியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீட்டுரையை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நிகழ்த்தினார்.சஞ்சிகையின் முதற் பிரதியை பல் வைத்தியர் மா.தவராசா பெற்றுக்கொண்டார்.

இதுவரை காலமும் கையெழுத்துப் பிரதியில் வெளிவந்த மேற்படி சஞ்சிகை முதற் தடவையாக கணினிப் பதிப்பில் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலிக்கு 254 பேரைக் கடத்தும் முயற்சி; 04 பேரைக் கைதுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக 254 பாகிஸ்தான் பிரசைகளை இலங்கை ஊடாக இத்தாலிக்கு அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பாக மேலும் மூன்று இலங்கையர்களையும் ஒரு பாகிஸ்தான் பிரசையையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சிறிலங்காவின் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் பிரசைகளை ஏற்றிச்சென்ற கப்பலின் ரஷ்ய நாட்டுக் கப்டனையும் மூன்று சிப்பந்திகளையும் பொலிசார் தங்காலை நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

254 பாகிஸ்தான் பிரசைகளையும் இந்தமாதம் 16 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கப்படவுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

# கொழும்பின் பல இடங்களில் தேடுதல் 34 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது

(கொழும்பு)

கொழும்பில் பல இடங்களில் கடந்த புதன்கிழமை இரவு முதல் நேற்றுமுன்தினம் காலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 34 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

101 வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, 106 ரோந்து நடவடிக்கைகளும் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கொழும்பு தெற்கு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நான்கு சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டதுடன் 13 வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## -சிறுவர் உரிமைகள் தொடர்பாக-

# புலிகள்– யுனிசெவ் கிளி.இல் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுக்கும் யுனிசெவ் பிரதிநிதிகளுக்குமிடையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியக மண்டபத்தில் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதில் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுதல், சிறுவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அத்துமீறல் நடவடிக்கைகள், சிறுவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, உதவிப் பணிப்பாளர் இனியவன்,தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர்.லோறன்ஸ் கிறிஸ்ரி, அரசியல் துறையைச் சேர்ந்த தியாகராஜா, தமிழர் புனர்வாழ் வுக்கழக அவுஸ்திரேலிய கிளை யைச் சேர்ந்த பரமநாத பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யுனிசெவ் பிரதிநிதிகள் தரப்பில் தேசிய சிறுவர் பாதுகாப்புப் பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி சராலன்டொான், யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த பென்னி புறுான் மைக்கல் ஹெல்லன்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)

# ஓமந்தை கல்லூரியைப் புனரமைக்க பத்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(வவுனியா)

ஓமந்தை மத்திய கல்லூரியைப் புனரமைக்க பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த இப்பாடசாலையைப் புனரமைப்புச் செய்ய உடனடி நிதியாக எட்டு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் ஓமந்தைப் பகுதியில் மக்களை மீளக் குடியமர இராணுவத்தினர் அனுமதித்தனர். இதனையடுத்து இப்பகுதி மக்கள் தமது மாணவர்களின் கல்விக்காகப் பாடசாலையைப் புனரமைப்புச் செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர். இதற்கமைய இந்தப் பாடசாலை புனரமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ((Ū))

# ஜே.வி.பி.சுதந்திரக்கட்சி இன்று மீண்டும் சந்திப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை இன்று மாலை சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருதரப்பினருக்கும் இடையில் தேசிய முன்னணி அமைப்பது தொடர்பாகத் தீர்வு காணப்படாது இருக்கும் பிரச்சினைகள் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படவுள்ளது.

இக்கூட்டு முன்னணியின் தலைவியாக சனாதிபதி சந்திரிகாவும், பொதுச்செயலாளர் ஜே.வி.பிக்கும் தேசிய அமைப்பாளர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# கடனை மீளளிக்காத பா.உறுப்பினர் மீது பதுளை பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஏ.ஆர் மக்கிம பண்டாரவிற்கு எதிராகப் பதுளை பொலிஸ் நிலையத்தில் விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான உருளைக்கிழங்கு விதைகளைக் கடனாகப் பெற்றுக் கொண்டு அதனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாராளுமன்ற உறுப்பினர் ஊவா மாகாண விவசாய அமைச்சின் ஊடாகக் கிழங்கு விதைகளைப் பெற்றுள்ளார்.

மாகாண சபை 6500 அந்தர் விதைகளைக் கொள்வனவு செய்தது. அவற்றை விற்க முடியாது போனதால் கடனடிப்படையில் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தது.

இதன் மூலம் ஆறு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா கிடைக்க வேண்டும். கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாதவர்களில் ஊவா மாகாண அமைச்சர் ஒருவரும் அடங்குகின்றார்.

## - திலீபன் மருத்துவமனையினரால் -

# முதலுதவி சிகிச்சை நிலையம் மருதங்கேணியில் திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சிகிழக்கு புனர் அமைப்புக் குழுவின் அனுசரணையுடன் ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையினர் மருதங்கேணிப் பகுதியில் முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்றினை கடந்த புதன்கிழமை திறந்து வைத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு புனர் அமைப்புக் குழு செயலாளர் வ.தவராசா தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வடமராட்சி வலயக் கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன்,வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் சோமசுந்தரம், செம்பியன்பற்று பிரதேச சுகாதாரப் பரிசோதகர் நாகேந்திரம் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளைச் சேர்ந்த கலையரசன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி அவர்கள் ஈகச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை நாடவினை வெட்டி முதலுதவி சிகிச்சை நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தலைமை உரையும் சிறப்புரைகளை வத்திராயன் கிராமசேவகர் க.ம.ஜோசப், வடமராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், வடமராட்சி கிழக்கு கடற் புலிகளின் அரசியல் துறை மக்கள் தொடர் பாளர் யாழ்மன்னன், வடம ராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.நன்றி உரையினை வடமராட்சி கிழக்கு புனர் அமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலம் நிகழ்த்தினார்.

# மகிந்தவின் தொலைபேசி இணைப்பு பல மாதங்களாகத் துண்டிப்பு

(கொழும்பு)

கொழும்பு மக்கள் பர்ணாந்து மாவத்தையிலுள்ள எதர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்திலும் டொரிங்ரன் அவன்யுவிலுள்ள அவரது வாசஸ்தலத் திலுமுள்ள தொலைபேசிகள் பல மாதங்களாகத் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ளன. இதனால் தாம் மிகவும் சிரமத்துக்குள்ளாகி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவரது காரியாலயம் தொலைத் தொடர்புத் திணைக்களத்திடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

# அமெரிக்க பிரதித் தூதுவர் யாழ்-குடாநாடு விஜயம்

சிறிலங்காவுக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் டொனால்ட் காம்ப் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவில் தூதரக அரசியற் பிரிவு அதிகாரி கிளிஸ்லோஸ், தூதரகப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி இராஜதுரை, அரசியல் ஆய்வாளர் மாஜா வெஸ்லா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

யாழ் குடாநாட்டில் 3 தினங்கள் தங்கியிருக்கும் இக்குழுவினர் யாழ் அரச அதிபர், யாழ். ஆயர், பல்கலைக்கழகத் துணை வேந்தர் உட்பட பல்வேறு பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளனர்.

- தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் -

# நூற்றுக்கும் அதிகமான வழக்குகள் விசாரணையின்றி இழுத்தடிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் எவ்வித விசாரணைகளும் இன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விசாரிக்கவென வெலிக்கடைச் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் இவர்களின் வழக்குகள் துரிதமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போதிய சாட்சியங்கள் இல்லை என்ற அடிப்படையில் சட்டமா அதிபர் பல வழக்குகளை மீளப் பெற்றுள்ளதால் சந்தேக நபர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எஞ்சியுள்ள வழக்குகளைத் துரிதமாக விசாரணைக்குட்படுத்தித் தீர்ப்பு வழங்கவுள்ளதாக மேல் நீதிமன்ற நீதியரசர் சுனில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

ஆயினும், இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் வழக்குகள் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

---

## எம் நந்தாவிளக்கே

## உன் நான்காம் ஆண்டிலே!

அன்னையின் முத்தாக — மண்ணின் வித்தாக



1975 * 07 * 05 — 1999 * 04 * 17

### வீரவேங்கை நிதர்சனா

### தவராஜா அருணா (அனு)

வாழ்வது மாயம் - அது
மண்ணாவது திண்ணம்
சொல்லுக்கு முன் செயல் - என்று
வாழ்பவர்கள் தியாகிகள்

மரத்திற்கு பிடிமானம்
வேரும் விழுதுகளும்
மண்ணின் சுதந்திரத்திற்கு
வீரர்களும், தியாகிகளுமே

ஒரு கொடியில் உதித்த
உதிர உறவே
உன் நினைவோடு
ஊசலாடும் உறவுகள்

அம்மா, பெரியண்ணா, அண்ணி, சின்னண்ணா, தம்பி, மருமகன்.

நி.மு:-'ராஜாஸ்வாசம்' மூளாய் வீதி, வட்டுக்கோட்டை — தி.மு:- முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(3417)

---

## 2ம் ஆண்டு நினைவில் உறைவோம்



பிறப்பு 1977 — 05 — 17

வீரச்சாவு 2001 — 07 — 05

### வீரவேங்கை

### நடராஜா உதயராஜ்

எல்லைப்படை எனும் அண்ணன் படையில் இணைந்து
எல்லைகள் பல கண்டு எதிரிகளை ஓட வைத்து
எம்மை எல்லாம் எங்கே அந்த உதயா என்
ஏங்கவிட்டு
எல்லோர் நெஞ்சிலும் அழியா இடம் பிடித்தவனே
எவ்வாறு சரிந்து ஒளி மறைந்ததோ நாமறியோம்.
என்றும் எம்மை விட்டு நீ மறையாய் நாமறிவோம்

இம்மாவீரரோடு வீரகாவியமான ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

உதயராஜ் குடும்பத்தினர்,
இல- 144/1,
விசுவமடு.

(3314)

---

## சிரமதானம்

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் நேற்று முன்தினம் சிரமதானப் பணி வேலைகள் நடைபெற்றன.

விசுவமடு, வள்ளுவர்புரம் கிராம தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் பெருந்திரளான மக்கள் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (14)

## விவசாயத்திணைக்களம் மீண்டும் முல்லையில்

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வு காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இயங்கி வந்த உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனை வரும் 7ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் இயங்க உள்ளது என உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (20)

## முன்பள்ளி சிறார்கள் விளையாட்டு விழா

வள்ளிபுனம் செந்தமிழ் முன்பள்ளிச் சிறார்களின்/சிறார்களுக்கான விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு செந்தமிழ் முன்பள்ளி அருகாமையில் நடைபெறும்.

## பொ.ஐ.முன்னணி பா.உ.களின் கூட்டம்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தற்போது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை பற்றியும் ஜே.வி.பி. சுதந்திரக்கட்சி கூட்டணி பற்றியும் ஆராயப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

## பற்சிகிச்சை முகாம்

பூநகரி மகாவித்தியாலயத்தில் அடுத்த திங்களன்று பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. தியாகதீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் நளாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம்முகாமை பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் நிருபன் நெறிப்படுத்தினார். இதில் 122 பேருக்கு பற்சிகிச்சை வழங்கப்பட்டது. (34)

---

# வவுனியாவில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வு

வவுனியாவில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வுகள் பல பகுதிகளிலும் பரவலாக இடம்பெற்று வருகின்றது. வவுனியா மாவட்ட அரசியல் துறையினரால் மேற்கொள்ளப் பட்டு வரும் இந்த வீரமுரசு வார அரங்கு நிகழ்வு நேற்று செவ் வாய்க்கிழமை செட்டிகுளம் பிரதேசத்திலும் நேற்று முன் தினம் வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத் திலும் நடைபெற்றது.

---

முத்துஐயன்கட்டு வலதுகரை
தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய

## பொங்கல் விழா

நிகழும் ஆனித்திங்கள் 21ஆம் நாள் சனிக்கிழமை (05-07-2003) இரவு பொங்கலும் விசேட அபிஷேக ஆராதனைகளும் 06-07-2003 ஞாயிற்றுக்கிழமை பகல் அன்னதானமும் அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து எம்பெருமான் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

(3248)

---

## 2ஆம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 24 . 05 . 1981

வீரச்சாவு 05 . 07 . 2001

அன்பு அச்சகப் பணிப்பாளர்

### வீரவேங்கை

### விஜயசுந்தரம்-சுதாகர்

எங்கள் ஆசைத் தம்பியே
உன் பிரிவால் வாடுகின்றோம்
உன் முகத்தை நாங்கள் எப்போது பார்ப்போம்
உன் புன்னகைச் சிரிப்பு எங்கே
இனி நாங்கள் உன்னை எப்போது பார்ப்போம்.

குடும்பத்தினர்.

நி.மு:- அளவெட்டி வடக்கு, அளவெட்டி. — த.மு:- இரத்தினபுரம், கிளிநொச்சி.

(3419)

---

## சாவு அறிவித்தல்

### தம்பையா இளையதம்பி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், 5ஆம் வாய்க்கால் பரந்தன் விவசாயப் பெருமகனும், கொக்குவில் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இளையதம்பி அவர்கள் (02.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா பொன்னாச்சி அவர்களின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மற்றும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ்) வைத்தியலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவநேசன் (கனடா) சிவகங்கா, சிவசீலன், சிவதாசன்(கனடா) சிவராதிகா (2ம் வருட யா.தேசியக் கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி (கனடா) சரவணபவன்(உதவி நிலஅளவை அதிகாரி), வர்ணி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜிதன், றிஷான், சாமினா, விபிஸ்ணா, சகானா ஆகியோரின் அருமைப் பேரனும் பஞ்சாட்சரம்(தாமோதரம்பிள்ளை அன்சன்ஸ்-சாவகச்சேரி), சந்திரகுமார்(கொழும்பு), நவனகுமார் (இராசம் கொமினிக்கேசன் யாழ்ப்பாணம்) சிவபாலசுந்தரம் சிவகாந்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-07-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(3418)

## சிந்தனைக்கு



கப்டன் மில்லருடன் 'கரும்புலிகள் சகாப்தம்' ஆரம்பமாகிறது. என்றுமே உலகம் கண்டிராத - எண்ணிப் பார்க்க முடியாத - தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-07-2003

## எதிரியைத் தொலைவில் நிற்க வைத்தவர்கள்!

இன்று இலங்கைத் தமிழ்மக்களுக்காக தமக்காகத் தம் இன்னுயிர்களை ஈகம் செய்த கரும்புலிகளை நினைவு கூரும், அவர்களின் அர்ப்பணிப்பிற்கும் தியாகத்திற்கும் சிரம் தாழ்த்தி வீரவணக்கம் செலுத்தும் உன்னதமான நாள்.

1987ஆம் ஆண்டு இன்றைய நாளில் தான் (05-07-1987) கரும்புலி கப்டன் மில்லர் வடமராட்சியில், நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது வெற்றிகரமான கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்தி வீரகாவியமான நாள்.

அன்றிலிருந்து இன்று வரையில் கடலிலும், தரையிலுமாக ஆண் மற்றும் பெண் போராளிகளென 240க்கும் மேற்பட்டோர் கரும்புலிகளாக தம் இன்னுயிர்களைத் தாயக மண்ணிற்காக அர்ப்பணிப்புச் செய்துள்ளனர். இவர்கள் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த விதங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறானவை. ஆச்சரியத்திற்கும், அதிசயத்திற்கும் உரியவை.

ஆனால், இவர்கள் யாவரதும் ஒரே குறிக்கோளாகவும், இலட்சியமாகவும் இருந்தது ஒன்றே, அது எமது மண் மீட்கப்பட வேண்டும், எமது மக்கள் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கென தம்மைத் தாமே ஆள்வதற்குரிய ஆட்சி உரிமை கிடைக்கப் பெற வேண்டும் என்பதாகவே இருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இத்தகையதொரு போர் வடிவத்தினைத் தேர்ந்தெடுத்தமையானது வரட்டுத்தனமானதொரு சிந்தனையின் வெளிப்பாக அல்ல. அரச பயங்கரவாதம் எல்லை மீறியதாக-பெரும் ஆட்பலத்துடனும் ஆயுத பலத்துடனும் மிலேச்சத்தனமான வகையில் இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகையில், சிறுபான்மை இனமொன்று போதிய ஆயுத பலமுமற்ற நிலையில் இத்தகையதொரு போர் வடிவத்தினைத் தேர்ந்தெடுப்பதனைத் தவிர வேறுவழி இல்லாததன் விளைவே கரும்புலிகள் என்ற உயிராயுதம் போர் வடிவமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இப்போர் வடிவமானது சிறிலங்காவின் இராணுவ, அரசியல் வரலாற்றில் கொடுத்துள்ள அதிர்ச்சிகளும், மாற்றங்களும் அவற்றின் வரலாற்றினையையே தீர்மானிப்பவையாக இருந்தன வெனில் மிகையாகாது. தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் மிக்கதொரு போராட்டமாகக் கொள்ளப்படுகின்றமைக்கும் அது பெற்றுக் கொண்டுள்ள பரிமாணத்திற்கும் இக் கரும்புலிகள் ஆற்றியுள்ள பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

ஆனால், இப்போர் வடிவத்தினை ஒரு தரப்பினர் பயங்கரவாதச் செயன்முறை என்ற ரீதியில் சித்தரிக்க முற்பட்டு நிற்கின்றனர். ஏனெனில் இப்போர் வடிவமானது மரபு வழியிலான போர் முறையில் உள்ளடக்கப் படுவதில்லை எனக் கூறவிழைகின்றனர். ஆனால், இவர்களில் எவருமே சாத்வீக ரீதியிலோ அன்றி சிறிய அளவிலான வன்முறை வடிவிலோ ஒரு சிறுபான்மை இனம் தமது உணர்வுகளையும், எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தும் போது அவற்றிக்கு மரியாதை அளிக்கவோ, உரிய நடவடிக்கைகளோ எடுப்பதில்லை.

மாறாக, சிறுபான்மையினரின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்கவும், அவர்களை அச்சுறுத்துவதற்குமெனவும், இராணுவ அடக்குமுறைகளையே கட்டவிழ்த்து விடுகின்றனர். குண்டர்களை ஏவிவிட்டு இனவன்முறைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், இதில் உள்ள துயரம் என்னவெனில், சர்வதேச சமூகம் என்ற ரீதியிலும் உலகின் வல்லாதிக்க சக்திகளாகவும், இப்பிரச்சினைகளில் அக்கறை காட்ட விளைபவர்கள், ஒடுக்குமுறை அரசுகளுக்கும், சக்திகளுக்கும் உளப் பூர்வமாகவும், ஆயுத ரீதியாகவும் ஒத்துழைப்பை வழங்க முன்வருகின்றமையே ஆகும்.

இந்நிலையில், ஒடுக்குமுறையில் பெரும் இன்னல்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் இனம்-ஒடுக்குமுறையாளர்களைத் தூர விலகியிருக்கச் செய்யவும், விரும்பிய வேளைகளில் அவர்கள் தமது இனவெறியையோ அதிகார வெறியையோ அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடாமல் செய்வதற்கும் மிகவும் சக்தி வாய்ந்ததான இவ் உயிராயுதம் அவசியமானதாக உள்ளது.

இன்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சர்வதேச ரீதியிலான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளமைக்கும், சமாதான வழிமுறைகளில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தீர்வொன்றைக்காண முன்வந்துள்ளமைக்கும் இக்கரும்புலிகளின் தியாகமும் அர்ப்பணிப்புக்களும் பெரும் பங்காற்றியுள்ளன. இப்போராட்ட வடிவத்தினைப் போராட்டக் களத்தில் இருந்து விலக்கி விடுதல் என்பதற்கான முயற்சிகளில் சிறிலங்கா அரசு உட்பட்ட சில வல்லாதிக்க சக்திகள் முற்படாமலும் இல்லை. இதன் காரணமாக இப்போராட்ட வடிவத்தை அவர்கள் கண்டனம் செய்யவும் - இப்போராட்ட வடிவத்தைக் கைவிடுமாறு வற்புறுத்தாமலும் இல்லை.

ஆனால், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில், கரும்புலிகள் என்பது விலக்க முடியாததொரு சக்தியாக, போராட்ட வரலாற்றை நிர்ணயிக்கும் சக்தியாக உருவாகியுள்ளது என்பதே யதார்த்தமாகும். இத்தகைய ரீதியில் முதன்மை பெற்ற சக்தியாக கரும்புலிகள் கருதப்படுகின்றமைக்கும், அக்கறை காட்டப்படுகின்றமைக்கும் கடந்த காலத்தில் அவர்கள் புரிந்த அர்ப்பணிப்புக்களுடன் கூடிய சாதனைகளே முக்கிய காரணமாகும். இதற்காக தமிழ் மக்கள் என்றும் அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களாகவே உள்ளனர்.

# சமாதான முயற்சியிலும் புனரமைப்பிலும் ஐரோப்பிய ஆணைக்குழு பங்கேற்க முடிவு

## மிலிந்தவிடம் ஐ.ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளிலும், புனரமைப்பு பணிகளிலும் விரிவான வகையில் பங்கேற்க ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஆணைக் குழுவின் வெளி விவகார கொள்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி மிலிந்த மொறகொடவைச் சந்தித்துள்ளார். இச் சந் திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இச் சந்திப்பு ஐரோப்பிய பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் மொறகொட தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில் டோக்கியோவில் திருப்பிச் செலுத்தாதவாறு 05 கோடி யூரோக்களை இலங்கைக்கு வழங்கியமை குறித்து பிரதமர் சார்பில் அமைச்சர் தனது நன்றிகளைக் கூறியுள்ளார்.

இச் சந்திப்பு சமாதான முயற்சிகளுக்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பை வலுப்படுத்தும் நிகழ்வென அவர் மேலும் கூறியுள்ளார். இரு தரப்பு உறவுகளை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வழி வகைகளை ஆராயும் உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# அநுராவின் சொல்லைக் கேட்டால் சனாதிபதி கஸ்ரத்தில் விழநேரிடும்

## — அமைச்சர் காமினி லொக்குகே

(கொழும்பு)

என்னதான் சனாதிபதிக்கு அதிகாரம் இருந்து பாராளுமன்றைக் கலைத்தாலும் ஏ் அமைச்சுப் பொறுப்பை தன் வசப்படுத்துவது ரணிலின் ஆலோசனை இன்றி நடைபெற முடியாது என்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் அநுரா பண்டாரநாயக்க சனாதிபதியிடம் உள்துறை அமைச்சுப் பொறுப்பை கையேற்குமாறு கூறியதற்குப் பதிலளிக்கும்முகமாகவே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அநுரா எவ்வளவு பெரிய கல்விமானாக இருப்பினும் இந்நாட்டின் அரசியல் அமைப்புப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. லொத்தர் சபையை கையேற்று இப்போது என்ன நடைபெறுகிறது. சனாதிபதி கூறுவதுபோல் ஒரு அடி முன்னே வைத்தால் இரண்டடி பின்னால் வைக்க வேண்டியாயிற்று என்ற நிலை தோன்றியுள்ளது.

மக்களின் வாக்கைப்பெற்று சனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றுள்ளார். அது போலவே ரணிலும் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுள்ளார். இது சனாதிபதிக்குத் தெரிந்த விடயம். ஆனால் அவர் அநுராவின் பேச்சைக் கேட்பாரேயானால் மிகுந்த கஸ்ரத்தில் விழ நேரிடும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# பாவனைக்குதவாத ஆயுதங்களே வெடித்து அழிந்துள்ளதாம்

## சிறி.இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

அநுராதபுரம்-சாலியபுர இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சியத்தில் வெடித்துச் சிதறிய ஆயுதங்கள் வெடிப்பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்ட பாவனைக்குதவாதவையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன பத்திரிகையாளர்களிடம் பேசும்போது தெரிவித்துள்ளார்.

பயன்படுத்த முடியாதவை எனக் கருதி பிறிதொரு கட்டடத்துள் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களே இவ்வாறு அழிந்துள்ளதாகக் கூறினார்.

அவற்றுள் கைக்குண்டுகள், ஆர்.பி.ஜீ குண்டுகள், கிளைமோர்கள், தன்னியக்கத் துப்பாக்கி ரவைகள் என்பவை அடங்கும். இருப்பினும் இச் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி

## வில்லியம் சகோதரிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் போட்டிகளில் நடப்பு சாம்பியன் செரீனா வில்லியம்ஸ் இறுதிப் போட்டிக் குத் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் அவர் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனினை 6:3, 6:2 எனும் நேர் செட்களில் தோற கடித்துள்ளார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் பெல்ஜியத்தின் கிளைம் கிளைஸ்டரை 4:6, 6:3, 6:1 எனும் செட் கணக்கில் தோற்கடித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் வில்லியம்ஸ் சகோதரிகள் மோதவுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிப் போட்டியில் பிரிட்டனின் ஹென்மனை பிரான்ஸ் வீரர் றொட்ஸ் ஹிம் 7:6, 3:6, 6:3, 6:4 எனும் செட் கணக்கில் தோற்கடித்துள்ளார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் ஆண்டிரோடி, சுவிடனின் ஜோனஸ் ஜோக்மானை 6:4, 6:2, 6:4 எனும் நேர் செட்களில் தோற கடித்துள்ளார். ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு லியாண்டர் பையஸ் டேவிட் றிக்கிள் இணை, மகேஸ் பூபதி, மார்க் இணையுடன் மோதவுள்ளது.

# இங்., நியூசிலாந்து, அவுஸ். முத்தரப்பு கிரிக்கெட் போட்டி ஒக்டோபரில்

இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் சென்னையில் வரும் ஒக்டோபர் மாதம் தொடங்குகின்றது என்று இந்திய கிரிக்கெட்சபைத் தலைவர் ஜஸ்மோகன் டால்மியா அறிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணியுடனான கிரிக்கெட் போட்டி வரும் ஒக்டோபர் எட்டாம் திகதி தொடங்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளின் பின்னர் இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா இடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டித் தொடர் சென்னையில் தொடங்கும் என்று ஜஸ்மோகன் டால்மியா அறிவித்துள்ளார்.

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணியும் மூன்று முறை மற்றைய அணியுடன் மோத வேண்டும் என்றும், இறுதிப் போட்டி கல்கத்தாவில் வருகின்ற நவம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டப் போட்டி; 10 ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பம்!

## சுவிஸ் அணியும் கலந்து கொள்கிறது

(கிளிநொச்சி)

சுவிஸ் அணி கலந்து கொள்ளும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மேஜர் முரளி ஞாபகார்த்த கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டப் போட்டித் தொடர் ஒன்று கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் தேசிய ரீதியில் நடத்தப்படும் மேற்படி உதைபந்தாட்டத் தொடரில் தமிழீழத்தின் எட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அணிகளும் கலந்து கொள்கின்றன.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இப போட்டியின் முதற் போட்டியில் வவுனியா மாவட்ட அணியை சுவிஸ் அணி எதிர்த்துப் போட்டியிடவுள்ளது.

(லோ)




# 2010 குளிர் கால ஒலிம்பிக் கனடாவில்

2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு கனடா நாட்டிற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை எந்த நாட்டில் நடத்துவது என்பது குறித்து செக் குடியரசு தலைநகரில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியை தமது நாட்டில் நடத்த வேண்டும் என்று தென்கொரியாவும் ஆஸ்திரியாவும் பிடிவாதமாக இருந்தன.

மிகவும் கடுமையான போட்டிக்கிடையில், இக் குளிர்கால ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடத்துவது என்பது குறித்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இறுதியில் கனடா நாட்டில் நடத்த பிரதிநிதிகள் வாக்களித்தனர். இதனால் 2010ல் நடைபெறவுள்ள குளிர் கால ஒலிம்பிக் கனடாவில் நடைபெறவுள்ளது.

# அதிபரை துன்புறுத்த வேண்டாமெனக்கோரி
# யாழ். புனித சாள்ஸ் மாணவர் வீதி மறியல்

தமது அதிபர் மீது இம்சை புரிய வேண்டாம் என்று கோரி நேற்றைய தினம் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று மதியம் 12 மணி தொடக்கம் பாடசாலையின் முன்னால் அமைந்துள்ள கண்டி வீதியில் வீதியை வழிமறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இவ்வீதியின்போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

அண்மைக்காலமாகஇப்பாடசாலையின் அதிபரான திருமதி சின்னத்துரை மீது கொலை மீரட்டல்களையும் வீட்டுக்குக் கல்வீச்சு மற்றும் மர்மக் கடிதங்களனுப்புதல் தொலைபேசி மிரட்டல் என்பனவற்றைச் சிலர் செய்து வருகின்றனர். அத்துடன் பாடசாலைக்குக் கடமைக்கு வந்தால் கொலை செய்வோம் எனவும் மிரட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று இரவு அவரது வீட்டுக்குள் நுழைந்த இனந் தெரியாத நபர்கள் வீட்டுக்கு முன்னால் நின்ற மோட்டார் காரைத் தீவைத்து எரித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டால் கடந்த சில காலமாக அதிபா பாடசாலைக்குச் சமுக மளிக்கவில்லை இந்நிலையில் அதிபர் மீது துன்புறுத்தல் நிறுத்தப்படவேண்டும் எனக்கூறி மாணவர்களுடனும் சக ஆசிரியர் களுடனும் இணைந்து இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (27)

# பாக்.சியா முஸ்லிம்களின் பள்ளிவாசலில் குண்டுத் தாக்குதலில் 32 பேர் பலி

பாகிஸ்தானில் குவாட்டாவில் சியா முஸ்லிம்களின் பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த 32 பேர் பலியாகினர்.52 பேர் படுகாயமடைந்தனர். நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. 2000 பேர் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளை இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என சிலர் தெரிவிக்கும் அதேவேளை கைக்குண்டுகள் மசூதிக்குள்வீசப்பட்டதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதலையடுத்து கோபம் கொண்ட சியாமுஸ்லிம்கள் தெருவில்இறங்கி கார்களையும் ரயர்களையும் எரித்துள்ளனர்.

மசூதி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உடனடியாக எவரும் உரிமை கோரவில்லை. குண்டுவெடிப்பையடுத்து கலவரங்களை அடக்க பராதுருப்புகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.



## தமிழர் தாயகப்...

மாலை நிகழ்வுகள் வேலணை வங்களாவடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி துறையூர் ஐயனார் சனசமூக நிலைய மைதானம் வரை பாண்ட் வாத்திய அணிநடையுடன் வந்தடைந்து அங்கு பொதுக் கூட்டமும் இசைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

வடமராட்சியில் காலை நிகழ்வுகள் கரும்புலிகப்டன் மில்லர் நினைவாலயத்தில் காலை 9மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகி நெல்லியடிச் சந்தியில் இருந்து பாண்ட் வாத்தியத்துடன் அணிவகுப்பு கரும்புலிகளினது திருவுருவப்படம் தாங்கியவாறு நடைபெறவுள்ளது. தொடர்ந்து கப்டன் மில்லர் நினைவுத் தூபியை பேரணி அடைந்ததும் ஈகச்சுடர் ஏற்றல் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும், கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கோட்டப் பகுதியில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் கரும்புலிநாள் நிகழ்வுகள் பொதுக்கூட்டம், கலைநிகழ்வுகள் என்பவற்றுடன் நிறைவடையவுள்ளன.

யாழ். நல்லூர் கோட்டத்தில் கொக்குவில் நாச்சிமார் கோவிலடியில் நடைபெறவுள்ள கரும்புலிகள் நாள் விழாவில் மாலை நிகழ்வாக ஈ.பி. சிவநாதன் (தலைவர் பொருளியல்துறை யாழ்.பல்கலைக்கழகம்) கருத்துரை வழங்கவுள்ளார். இத்துடன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள மாலை நிகழ்வில் இரத்தினம் (விரிவுரையாளர் வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) கருத்துரை வழங்கவுள்ளார்.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் கலாநிதி சூசையானந்தன் (விரிவுரையாளர் புவியியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) கருத்துரை வழங்கவுள்ளார்.

இதேவேளை வடமராட்சியில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களால் "உதயத்துக்கான அஸ்தமனம் நாடகம ஒன்றும் காணபிக்கப்படவுள்ளது.

கரும்புலிகள் தினத்தை சிறப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளிலும் பல்வேறு பிரதேச சங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பேசாலை பொது விளையாட்டரங்கில் இடம்பெற இருக்கும் பிரதான நிகழ்வில் விடுதலைப்புலிகளின் தளபதிகளும் மூத்த தளபதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியிலும் கரும்புலிகள் நினைவுதினம் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வவுனியாப் பூந்தோட்டம் முகாம் பகுதியில் இந்த நிகழ்வு காலை 9 மணியளவில் ஆரம்பமாகி மாலை தமிழீழ விடியல் இசைக்குழுவின் கலை நிகழ்வுகளுடன் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வட்டக்கச்சிப்பிரதேசத்தில் இன்று இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து காலை 8 மணிக்கு கரும்புலிகள் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பிரதான வழியாக மாவீரர் மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டு மாவீரர் மண்டபத்தில் காலை நிகழ்வுகள் நடைபெறும். பின்பு கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்தி வட்டக்கச்சி பிரதேசம் எங்கும் எடுத்துச் செல்லப்பட்டு மாலை இராமநாதபுரம் மேற்கு பாடசாலையை அடைந்ததும் இரவு போராளிக் கலைஞர்கள் உட்பட பல கலைஞர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.மன்னார் மாவட்டத்திலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரின் தலைமையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஒரு கப்பல் வடிவிலான கரும்புலிகளின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மன்னார் மாவட்டம் எங்கிலும் பவனிவரவுள்ளது. (மி,12)


## பணியாளர் தேவை

இடம் - குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையம்,
ஜெயந்திநகர்,கிளிநொச்சி.

வெற்றிடங்கள்:-
* நிர்வாக அலுவலர்-01,* கணக்காளர்-02 * பராமரிப்பாளர்-04 * திட்ட இணைப்பாளர்-01 * அனுபவம் வாய்ந்த தட்டெழுத்தாளர்-01

கல்வித்தகைமைகள்:- நிர்வாக அலுவலர்- க.பொ.த உயர்தரம், ஓரளவேனும் ஆங்கில அறிவு.
கணக்காளர்- க.பொ.த. உயர்தரம் (வணிகப் பிரிவு) திட்ட இணைப்பாளர் -க.பொ.த.உயர்தரம் (ஆங்கில அறிவு)
குறிப்பு:- திட்ட இணைப்பாளர் தவிர ஏனைய பணிநிலைகளுக்கு பெண்பாலார் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 15-07-2003

தொடர்புகளுக்கு:-இயக்குனர்,
குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(3420)


# சுவீடனில் புலிகள் செயற்பட தடை ஏதும் இராது
## - சுவீடிஸ் அரசு அறிவிப்பு

(ஸ்ரொக்ஹொம்)

தமது நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடு தடைசெய்யப்பட மாட்டாது என்று சுவீடன் அரசு அறிவித்துள்ளது.

சுவீடன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொண்டவருமான ஹான்ஸ் நிக்கல்சன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியில் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்பினரின் தொடர்புகளைத் தாம் பேண வேண்டியுள்ளதால் தமது நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து தான் அறிந்து வைத்திருப்பதாகக் கூறிய அவர், அவர்களது செயற்பாடுகளை எதிர்காலத்தில் தடுப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுவீடன் ஒரு சுதந்திமான நாடு என்றும் எனவே விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தடைசெய்ய வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசுடன் கடந்த ஏப்ரல் மாதம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அடுத்த மூன்று வருடத்துக்கு நாட்டின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு 35 மில்லியன் டொலர்களை வழங்க சுவீடன் அரசு இணங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

- யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து -

# பிரேதங்களை எடுத்துச் செல்கையில் படையினர் கடும் சோதனை

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து பிரேதங்கள் எடுத்துச் செல்லப்படும் போது பிரேதப் பெட்டிகளையும், எடுத்துச் செல்லும் ஆட்களையும் படையினர் கடுமையான சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாக்குவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த வைத்தியசாலையிலிருந்து பிரேதங்களை எடுத்துச் செல்லும் பாதை 512 வது பிரிகேட்ஸ் படைத்தளத்தின் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகவே அமைந்துள்ளது.

இதனால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள படையினருக்கு வசதியாகவுள்ளது.

முன்பு வெறுமனே தகவல்களை மட்டுமே பதிவு செய்துவிட்டு அனுமதித்த படையினர் கடந்த சில வாரங்களாக பிரேதப் பெட்டிகள் மூடப்படும் இடத்திற்கு வந்து அவற்றைச் சோதனை செய்த பின்னரே அனுமதிக்கின்றனர். அதைவிட வாகனங்களைத் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டபின்னரே இப்பாதையூடாக அனுமதிக்கின்றனர்.

இந்த நிலையைச் சுட்டிக்காட்டி பாதுகாப்பு அமைச்சு, பிரதமர் மற்றும் சனாதிபதி போன்றோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (33)

## பொதுமகனைத்...

யாணைக்குழுவால் இந்தச் சம்பவம் விசாரணைக்கு எடுக் கப்பட்டது. இதன்போது தனது குற்றத்தை பொலிஸ் அதிகாரி ஒப்புக் கொண்டார். தன்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று மன்றாட்டமாகவும் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து மனிதவுரிமைகள் ஆணைக்குழுவால் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இனிவரும் காலங்களில் இப்படியான சம்பவங்களில் ஈடுபட்டால் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்றும் மனிதவுரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (33)

## சம்பள உயர்வு..

வேண்டிய அம்சங்களைச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் கூறியுள்ளார்

## யாழ்.மருத்துவப்..

நடவடிக்கைகளின் போது சில வாகனங்களின் இலக்கங்களையும், வாகன ஓட்டிகளின் பெயர்களையும் பதிவு செய்துள்ளார்கள்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது சில படையினர் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து வீதியை அவதானித்துமு ள்ளனர். இதனால் சில மணிநேரம் மக்களின் இயல்பு வாழ்க்கை குழம்பி அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (33)

## இடைக்கால...

இந்நிலையில் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டாளராகச் செயற்படும் நோர்வே அரசு மீண்டும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் விசேட தூதுவராக சிறிலங்காவிற்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கையும் கொழும்பிற்கு அனுப்பி வைத்தது.

ஆனால் ஜோன் வெஸ்பேர்க் கொழும்பிற்கு வந்து சில தினங்கள் கடந்த நிலையிலும் அரசாங்கம் தனது திட்டவரைபை கையளிக்காத நிலையில் சலிப்புற்ற வெஸ்பேர்க் கொழும்பிலிருந்து மாலைதீவிற்கு ஒருவார கால பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதனால் அவர் ஓரிரு தினங்களில் வன்னி வரலாம் என்ற ஆருடங்களும் பொய்த்துப்போயுள்ளன.

இதேவேளை அரசாங்கம் திட்டவரைபு ஒன்றைத் தயாரிப்பதில் காட்டும் காலதாமதம் குறித்து சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டும் வேறு சில மேற்குலக நாடுகளும் சலிப்படைந்துள்ளன. இடைக்கால நிர்வாகம் குறித்த அரசின் பதில் உறுதியாக வெளிப்படுத்தாத நிலையில் - சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்பதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டைபுலிகள் வெளியிட்டுள்ள நிலையில் அரசாங்கம் செய்யும் காலதாமதமானது. அரசாங்கமும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து உறுதியான முடிவொன்றிற்கு வரவில்லை என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.